**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,**

**ஜெயங்கொண்டம்.**

**CC No. 83 /2021**

2026ம் ஆண்டு ஜுன் மாதம்11ஆம்நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி–01, திருமதி.கஸ்தூரி என்பவரின் வாக்குமூலம்(1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.செ.சாஸ்தா குமரன்,மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.கஸ்தூரி | வயது | : | 50 /26 |
| க.பெ. | : | அரியமுத்து | தொழில் | : | விவசாயம் |
| ஊர் | : | புத்தூர் | நிலை | : | LW01 / PW01 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

( எதிரி ஆஜர் )

**முதல்விசாரணை:**

நான் புத்தூரில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். எங்களுக்கும் ஆஜர் எதிரிக்கும் இடையே இடப்பிரச்சனை இருந்து வருகிறது. கடந்த 2021ம் வருடம் தேதி, மாதம் நினைவில்லை, ஒருநாள் மாலை சுமார் 05.00 மணியளவில், என் வீட்டின் பின்புறமிருந்து நான் எள் புடைத்துக்கொண்டிருந்தேன். ஆஜர் எதிரி அங்கு வந்து என் கணவரையும், என்னையும் அசிங்கமான வார்த்தைகளால் திட்டிக்கொண்டிருந்தார். அப்போது ஆஜர் எதிரியிடம் ஏன் என்

கணவரை இவ்வாறு திட்டுகிறாய் என்று கேட்டபோது, ஆஜர் எதிரி என்னை கொச்சை வார்த்தைகளால் திட்டி, உன்னை இன்றைக்கே இல்லாமல் ஆக்கிவிடுகிறேன் உன் உயிரை எடுத்துவிட்டுத்தான் நான் இங்கிருந்து செல்வேன் என்று கூறிக்கொண்டே அவர் வீட்டிற்குள் சென்று இரும்பு ராடை எடுத்துக்கொண்டு வந்து, என் தலையில் அடித்ததில், மண்டை உடைந்து இரத்தமாக ஓடியது. பின்னர் இடது கை, வயிற்றின் மேல்பகுதி, கால் ஆகிய இடங்களில் அடித்ததில் எனக்கு இரத்தம் கொட்டியது. ( சாட்சி தற்போது தலை, இடதுகை, வயிற்றின் மேல் பகுதியில் உள்ள காயத்தழும்புகளை காட்டுகிறார்).அப்போது சீனிவாசன் என்பவர் குழந்தை குட்டி இல்லாதவர்களை ஏன் அடிக்கிறாய் என்று சொல்லி, எதிரியின் முதுகில் இரண்டு அடி கொடுத்து, அவர் கையில் இருந்த இரும்பு ராடை பிடுங்கி அவரை அங்கிருந்து விலக்கிவிட்டார். ஆஜர் எதிரி கையில் வைத்திருந்த ராடை காண்பித்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று என்னை மிரட்டினார். எனது பங்காளி மகன் நடராஜன் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் மூலம் அரியலூர் அரசு மருத்துவமனைக்கு சேர்ந்தேன். சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

/ உண்மை நகல்/
ஒம்/–P.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்1,
ஜெயங்கொண்டம்.